## அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில்

# முதல்வர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் – கம்பம் செல்வேந்திரன் பங்கேற்பு!

அரியலூர், ஏப், 14 -

அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் 72 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் செந்துறை வடக்கு ஒன்றியம் ஆர்.எஸ்.மாத்தூர் கிராமத்தில் ஒன்றிய கழக செயலாளர் வி.எழில்மாறன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக முன்னாள் மாவட்ட பிரதிநிதி இரா. கோடி வரவேற்று பேசினார்.

சி.அன்பழகன், செ.ஆசைத்தம்பி, துரை.ரவி, சத்தியபாமா புலவேந்திரன், சி. நன்னன்,மு.சபாபதி, வி. ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன், கழக இளம் பேச்சாளர் அசாருதீன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், குன்னம் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் ஏ.கே.அருண், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன்,

பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட கழக ஒன்றிய பார்வையாளர் அ.சதீஷ், மா.சிவபிரகாசம், கோ.சின்னத்தம்பி, பி.ஆர்.பாண்டியன், ஆ.அருள், பாண்டியன், பி.பி.செல்வம், ப. கலையரசன், ஆ.தமிழ்மாறன்,மருத்துவர் செ.சஞ்சய், எம்.சி.சித்ரா, பெ.சிவகுமார், ம.செல்வம், வை.ரமேஷ், பரம.கோபி, ப.சித்ரன்,ஆர்.இலக்கிய, இரா.இராஜவேல்,வித்யா பிச்சப்பிள்ளை, கடலரசு, ஆ.சக்தி, சுகன்யா மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், முன்னாள் ஊராட்சி பிரதிநிதிகள், ஒன்றிய அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக கிளை கழக செயலாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஏழை, எளிய மக்களுக்கு ஏர்கூலர், மரக்கன்றுகள், பழக்கூடைகள், அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.





கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு நகர தி.மு.க. சார்பில் நகரப் பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி ஆகியோரது ஏற்பாட்டில் கோடை காலத்தில் மக்கள் பயன்பெறும் வகையில் கிருஷ்ணகிரி நகரப் பகுதிகளான புதிய பேருந்து நிலையம் மற்றும் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை ஆகிய பகுதிகளில் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டன. இந்தத் தண்ணீர் பந்தலை மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு பழம், குளிர்பானம், இளநீர், நீர்மோர் ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்.

## இன்று – அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும்

## “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்று

# அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் கொண்டாடிடுக!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

“வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்” என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, ”சமத்துவநாள் உறுதிமொழி” ஏற்றுக் கொண்டு வரப்படுகிறது.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டக் கழக அலுவலகங்களிலும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழகத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தி;

கீழே குறிப்பிடப்பட்டுள்ள “சமத்துவ நாள்” உறுதிமொழியை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை ”சமத்துவ நாளாக” கொண்டாடிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### “சமத்துவ நாள்” உறுதி மொழி

**சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும்,**
**சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி,**
**ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும்,**
**ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும்,**
**வாழ்நாள் எல்லாம் குரல் கொடுத்து,**
**எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,**
**நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய பிறந்த நாளில்,**
**சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க,**
**நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும்,**
**சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமாட்டேன் என்றும்,**
**சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன்.**

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 12.04.2025

தலைமைக் கழகம்
தி.மு.க.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 7 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டு ரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 15.04.2025 | சேலம் கிழக்கு | வீரபாண்டி | ஆட்டையாம்பட்டி | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், கொ.ரமேஷ் |
| 9 | 16.04.2025 | சேலம் கிழக்கு | ஏற்காடு | பேருந்து நிலையம் எதிரில், வாழப்பாடி | நாஞ்சில் சம்பத், ரா.கிருத்திகா |
| 10 | 17.04.2025 | சேலம் கிழக்கு | ஆத்தூர் | ராணிப்பேட்டை | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, பெ.மலர்கொடி |
| 11 | 18.04.2025 | திருப்பூர் வடக்கு | பல்லடம் | அண்ணா திடல், பொங்கலூர் | எழுத்தாளர் வே.மதிமாறன், கி.ரேஷ்மா |
| 12 | 19.04.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் வடக்கு | வெங்கமேடு, 9–வது வட்டம் | இரா.ராஜீவ் காந்தி, அ.நஸ்ரின் பானு |
| 13 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில் | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 14 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 15 | 19.04.2025 | திருச்சி வடக்கு | முசிறி | கைகாட்டி, பரிசில் துறை ரோடு | செந்தில்வேல், ம.சையது முஷரப் |
| 16 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 17 | 22.04.2025 | சேலம் கிழக்கு | கெங்கவல்லி | பேரூராட்சி அலுவலகம் அருகில், கெங்கவல்லி | திண்டுக்கல் ஐ.லியோனி, செ.முத்துகுமார் |
| 18 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | நாஞ்சில் சம்பத், க.செல்வமணி |
| 19 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |
| 20 | 27.04.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, சி.கா.சுகன் மந்த்ரன் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 11–04–2025.

கலைஞர் 100
1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி